1978 மார்ச் 20]

பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குக் கடன்கள்.

*637 வினா—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குக் கடனும், மானியமும் கதர் கிராமத் தொழில் வாரியம், பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து வருடா வருடம் பெற்று வழங்குகிறது. வறட்சிக் காலங்களிலும் புயல் மற்றும் வெள்ளம் ஏற்படும் சமயங்களிலும் அரசு சிறப்பாக கடனும், மானியமும் வழங்கி வருகிறது.

திரு. தே. ஞானசிகாமணி: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பதநீர் இறக்கும் தொழிலாளர்களுக்குப் பல ஆண்டுகளாக மானியமோ கடனோ கொடுப்பதில்லை. ஆகவே, அவர்களுக்குத் தனியாக கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதன் மூலம், கடனும் மானியமும் கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பதநீர் இறக்கும் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு மானியமாக ரூ. 50-ம், கடனாக ரூ. 50-ம், கருவிகள் வாங்கக் கொடுக்கப்படுகிறது. அதைப்போல், அவர்கள் மூலதனச் செலவிற்கு ரூ. 250 கடனாக வழங்கப்படுகிறது. நான்கு ஆண்டுகளில் 4 சத விகிதம் வட்டியிலே, அவர்கள் திருப்பிக் கொடுத்தால் போதுமானது. ரூ. 200 வழங்குகின்ற திட்டமும் இருக்கிறது, எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகிற பகுதியிலிருந்து அப்படிப்பட்ட மனுக்கள் வந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை, அப்படி மனுக்கள் வந்தால், தனிப்பட்ட முறையிலும் கொடுக்கப்படும். அவர்கள், தாங்களாகவே கூட்டுறவு முறையில் அமைக்க கூட்டுறவுத் துறை மூலமாக வந்தால், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தால், வாரியத்தினுடைய கூட்டத்திலே வைத்து முடிவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது சொன்னார்கள், வறட்சிக் காலங்களிலும், மற்றும் வெள்ளம், புயல் இருக்கும் காலங்களிலும் கடன் வழங்கப்படும் என்று சொன்னார்கள். பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் 6 மாதம்தான் அந்த வேலையில் ஈடுபடுகிறார்கள். மீதமுள்ள 6 மாதம் அவர்கள் தொழிலிலே ஈடுபட வாய்ப்பில்லை. ஆகவே, தொழிலில் ஈடுபடாத காலங்களில், அவர்களுக்குக் கடன் வசதி செய்து தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, பதநீர் இறக்குகின்ற காலம் 6 மாதம்தான். மீதமிருக்கிற 6 மாதங்களுக்குத் தொழில் செய்ய முடியாத சிரமம் இருக்கிறது. எனவேதான், பனந் தும்பு, நார், ஓலை இவைகளை எடுத்து, பயிற்சி நிலையங்களுக்கு அனுப்ப, ஓர்க்கிங் கேப்பிட்டல், மூலதனம் கொடுக்கிறோம். அதைத்தான் ரூ. 200, ரூ. 250 கொடுக்கிறோம் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைத் குறிக்கும்.)

(முற்பகல் 10-00.)

3. வினாக்கள்-விடைகள் நேரத்திற்குபின் ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்புவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினமும் இப்படி எல்லோரும் எழுந்திருந்து நிற்கிறீர்கள். கேட்டால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுகிறீர்கள். இதை எல்லாம் அனுமதித்தால் இதற்கே நேரம் சரியாக இருக்கும். என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் இனிமேல் ஒன்று செய்யுங்கள். முன் கூட்டியே என்னுடைய அறையில் வந்து, இன்ன காரணத்திற்காக நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப் போகிறேன் என்று சொல்லிவிட்டால் அனுமதிப்பதற்கு வசதியாக இருக்கும். இல்லை என்றால் அந்த பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கே பாயின்ட் ஆப் டிஸ் ஆர்டராக ஆகிவிடுகிறது. ஆகவே, தயவு செய்து நாளையிலிருந்து நான் சொல்கிற முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். திரு. அம்பிகாபதி தயவுசெய்து அமரவேண்டும்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர். இது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்குத் தெரியும். நான் நேரத்தை சுருக்கமாக்க வேண்டுமென்று கருதுகிறேன். நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க மனமில்லாமல், வேறு ஏதாவது எழுப்புவேன் என்பது வேண்டாமென்று சொல்கிறேன். திரு. அம்பிகாபதி அவர்களுக்கு முதலிலேயே சொன்னேன். தயவுசெய்து அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-ந் தேதி இந்த அவையிலே காவல்துறை மானியத்திலே 8 மணி நேர வேலை வேண்டும் என்று பேசினேன். ஆனால் நெல்லை மாவட்ட தினமலர் பத்திரிகையில் 24 மணி நேரம் வேலை வாங்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.